ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2473- 2026 ජනවාරි මස 23 වැනි සිකුරාදා - 2026.01.23

2473ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தயோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 20 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 24 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026,பெப்புருவரி மாதம் 13ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,

கொழும்பு 8,

2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

19 - B 82757 - 403 (2026/01)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை இரத்து செய்தல் (104ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாண சபையின் கம்பஹா மாவட்ட மினுவங்கொட பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் யூ. டபிள்யூ. ரி.யூ. ராஜகருணா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1984.10.18 ஆந் திகதி கம்/ பிர/ மினு/ 97 என்ற இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்பு பத்திரம் நைவல பெல வகாவ , மினுவங்கொடையைச் சேர்ந்த அஹம்பொடிகே பியரத்ன என்பவருக்கு வழங்கப்பட்டு கம்பஹா மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மீக/ மினு/ 06/ 87 என்ற இலக்கத்தின் கீழ் 1987.03.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக் காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி அன்பளிப்பு பத்திரத்தை காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்ைககள் மேற்கொள்ளப்பட்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2026.02.13 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலமாக அறியத்தரவும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா நிருவாக மாவட்ட மினுவங்கொடை பிரதேசசெயலகப் பிரிவில் தாசியபத்துவ 99 நாலபஹ கிராம அலுவலர் பிரிவில் நைவலை எனும் ஊரில் அமைந்துள்ள. நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல. மு.பி.கம். 570 என்ற இலக்கத்தைக் கொண்ட காணிப் பிரித்தெடுப்பு களப்பத்திரத்தில் இல. 52 காணித்துண்டு என அடையாளப்படுத்தப்பட்டுள்ள 1றூட்.15பேர்ச் பரப்பளவுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள நைவல பெல வகாவ என்ற அரச காணி.

வடக்கு : பிரவேசி வழி;
கிழக்கு : பிரவேசி வழி;
தெற்கு : காணித்துண்டு இல. 53;
மேற்கு : நைவல பெல வகாவ ஹிபி 77192.

யூ. டபிள்யூ. ரி.யூ.ராஜகருணாா ,
பிரதேச செயலாளர்.

மினுவங்கொடை,
2025.11.17.

01-285/ 1

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை இரத்து செய்தல் (104ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாண சபையின் கம்பஹா மாவட்ட மினுவங்கொட பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் யூ. டபிள்யூ. ரி.யூ. ராஜகருணாா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1984.10.16 ஆந் திகதி கம்/ பிர/ 3051 என்ற இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்பு பத்திரம் கோப்பிவத்தை யட்டியன, மினுவங்கொடையைச் சேர்ந்த துனுகுமாரகே விக்டர் பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்டு கம்பஹா மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மீக/ மினு/ 01/ 276 என்ற இலக்கத்தின் கீழ் 1987.11.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும்

உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக் காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி அன்பளிப்பு பத்திரத்தை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2026.02.13 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலமாக அறியத்தரவும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா நிருவாக மாவட்ட மினுவங்கொடை பிரதேசசெயலகப் பிரிவில் தாசியபத்துவ, 123 யட்டியன கிராம அலுவலர் பிரிவில் யட்டியன எனும் ஊரில் அமைந்துள்ள. நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல. மு.பி.கம். 426 என்ற இலக்கத்தைக் கொண்ட காணிப் பிரித்தெடுப்பு களப்பத்திரத்தில் இல.140 காணித்துண்டு என அடையாளப்படுத்தப்பட்டுள்ள 0.091 ஹெக்டயார் பரப்பளவுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள கோப்பியாவத்தை என்ற அரசாங்கக் காணி.

வடக்கு : பிரவேசி வழி;
கிழக்கு : காணித்துண்டு இல. 141;
தெற்கு : கோப்பியாவத்தை;
மேற்கு : காணித்துண்டு இல. 139.

யூ. டபிள்யூ. ரி.யூ.ராஜகருணா ,
பிரதேச செயலாளர்.

மினுவங்கொடை,
2025.11.26.

01-285/ 2

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள தங்கொடுவ பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக்காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடைப்பட்ட ) ஜயசிங்ஹ ஆரச்சகே விஜானி வசந்திகா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1982, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள புத்/ வென்/ பு/ 642 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கஹடவில, மடவலபிடியவத்த எனும் முகவரியில் வசிக்கும் ரனதுங்க முதியன்சேலாகே ஜேன்நோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாரவில மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் வென்/ 4/ 153 ஆம் இலக்கத்தின் கீழ் 1985.02.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2026.02.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

புத்தளம் நிர்வாக மாவட்டத்தின் தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவின் தகுனு பிடிகல் கோறளையில் உள்ள பொத்துவடவன கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கஹடவில எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் , நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ஐ/ 16/56 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் புத்தள நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்டு பி.பி. பு.27 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 02 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 32.02 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான மடவலபிடியவத்த எனும் பெயர் கொண்ட அரசகாணித்துண்டு.

வடக்கு : எம்.எல்.பெரேராவிற்குச் சொந்தமான தென்னந்தோட்டம் மற்றும் காணித்துண்டு இலக்கம் 50;

கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 50 மற்றும் காணித்துண்டு இலக்கம் 03;

தெற்கு : காணித்துண்டு இலக்கம் 03 மற்றும் ஜே.ஏ. அந்ராதுக்கு சொந்தமான மெதமுகலானவத்தை எனும் பெயர் கொண்ட தென்னந்தோட்டம் மற்றும் டீ.பீ. 225587;

மேற்கு : எம்.எல்.பெரேராவுக்குச் சொந்தமான கொஹிகொடல்ல எனும் பெயர் கொண்ட தென்னந்தோட்டம் மற்றும் எஸ். எம். பண்டப்புஹாமிக்குச் சொந்தமான ப.அ.10090 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள குத்தகைக் காணி டீ.பீ. 225587 மற்றும் ஜே.ஏ. அந்ராதுக்குச் சொந்தமான மெதமுகலானவத்தை எனும் பெயர் கொண்ட தென்னந்தோட்டம்.

ஜே.ஏ. விஜானி வசந்திகா ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
தங்கொட்டுவை,
2025.06.30.

01-284

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் டபிள்யூ. ஆர்.ஏ. சாகரிக்கா சீ ஹேரத் ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தாறாம் ஆண்டு மே மாதம் பன்னிரெண்டாம் திகதி ( 1984.05.12) சமர்ப்பித்துள்ள இல/குரு/பி 13775 எனும் அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மெல்சிரிபுர,ராகெதர எனும் முகவரியில் வசிக்கும் கீரிஎல்லே குருன்னாசெலாகே ஜேபின் என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்டக் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் B/16/789/88 இன் கீழ் 1988.06.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரித்தாளராகுவதற்கு சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது இருந்தும் அவர் பின்னுரித்தாளராக இருக்க விரும்பாத காரணத்தினால் அல்லது பின்னுரித்துக்கு ஒருவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்ைக எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அதனை 2026.02.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலமாக அறியத்தர வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் இஹல ஓதொட கோறளையில் உள்ள 130-கென்தவல ( புதிய 506- ராகெதர) கிராம அலுவலர் பிரிவில் ராகெதர கிராமத்தில் அமைந்துள்ள............... , நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட அவர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் இரண்டாம் இலக்க வெளிக்களத்தாளில் 2739 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 517 ஆம் இலக்கம் எனும் காணிப்பகுதி என கூறப்படும் அளவில் பூச்சியம் தசம் ஒன்று எட்டு ஆறு (0.186) ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான கீழே காட்டப்படும் எல்லைகள் கொண்டதுமான அரசாங்க காணித்துண்டு.

வடக்கு : நுழை பாதை;

கிழக்கு : நுழை பாதை;

தெற்கு : தொகுதி இல. 518;

மேற்கு : நுழை பாதை.

டபிள்யூ.ஆர்.ஏ. சாகரிக்கா சீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
இப்பாகமுவ,
2025.09.25.

01- 243/1

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் / பிரதிக்காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையிலான) திசாநாயக்க முதியன்சலாகே அனுர குமார திசானாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1984.02.22 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் குரு/ பி/ 07739 கொண்ட பிரதான பத்திரத்தின் உரிமையாளரான வெவகம இதிபிடியவத்தையில் வசிக்கும் கருணாபேடி துரயலாகே கரு அவர்களிடம் வழங்கப்பட்டிருந்த குளியாப்பிட்டிய பிரதேச பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் குளி/ கே. 08/ 151 இன் கீழ் 1990, மாச்சு மாதம் 16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் வரும் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பிரதியாளராக ஆவதற்கு சட்டப்படி உரித்தாளர் இல்லாதபடியால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்தும் அவர் பிரதியாளராக ஆவதற்கு ஏற்காத பட்சத்தில் அதற்கான பிரதியாளர் ஒருவரை நியமிக்க முடியாத நிலை ஏற்படுள்ள காரணத்தால் வழங்கல் பத்திர கட்டளைச் சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் செயலிழக்கச் செய்யப்படுகின்றது என அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் 2026.02.13 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அட்டவணை**

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் மயுராவதி கோரளையின் 1096 வெவகம கிராம அலுவலர் பிரிவின் பலகம்மன எனும் இடத்தில் அமையப்பெற்றிருக்கும் , நில அளவையாளர் பொறுப்பில் இருக்கும் மற்றும் நில அளவையாளாரினால் அளவிடப்பட்டுள்ள இலக்கம் 3 அளவை பத்திரத்தின் இலக்கம் 958 கொண்ட காணித்துண்டு இலக்கம் 43 காணித்துண்டாக காட்டப்பட்டுள்ள காணிப்பரப்பின் 0.056 ஹெக்டயார் அளவு கொண்ட காணி பின்வருமாறு எல்லைகளைக் கொண்ட இதிபிட்டிவத்தையைச் சேர்ந்த அரசாங்க காணியாகும் .

வடக்கு : பிரவேசிக்கும் பாதை;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 42;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 44;
மேற்கு : பிரவேசிக்கும் பாதை.

டீ.எம்.ஏ.கே. திசாநாயக்க,
பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்,
( மாகாணங்களுக்கு இடையில்).

பிரதேச செயலகம்,
குளியாப்பிட்டிய,
2023.08.24.

01-243/2

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

சப்பிரகமுவ மாகாண சபையின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் நானாயக்கார கிங்தொட விதானகே சிந்தன உதார ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் ஆளுநர் அதி மேதகு சனாதிபதி அவர்களால் 2017.06.23 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள GR/24/ 037023 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அக்கர 25, பெல்வாடிய, இரத்தினபுரி எனும் முகவரியில் வசிக்கும் தங்கதெனயே வேதாலாய மிசினோனா என்பவருக்கு (வாழ்வாதார உரிமைக்கு) கையளிக்கப்பட்டு இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாளர் அலுவலகத்தில் கா.ஆ. K 07/ 89 இன் கீழ் 2017.11.17 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராகுவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால்

பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்ைகயிடப்பட்டுள்ளது. ஆதலாலா குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்ைக எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2026.02.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

இரத்தினபுரி நிர்வாக மாவட்டத்ின் இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவின் குருவிட்ட கேரளே மெத பத்துவே பற்றில்/ குருலு கோரளையிலுள்ள கொலந்தகல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பெல்வாடிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான இரத்தினபுரி நில அளவையாளர் அத்தியட்சகரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு கடைசி நில அளவையின் துண்டின் இலக்கம் 10 இன் 32 ஆம் துண்டு இலக்கம் 117 தொடர்புடைய 0.176 ஹெக்டயார் விசாலம் உள்ளதுமான கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி மாயங்கள் அமைக்கப்பட்ட அரசாங்க காணி வெளிமழுவ வத்த ( காணியின் பெயர்).

வடக்கு : காணித்துண்டு இல.109;
கிழக்கு : காணித்துண்டு இல.116;
தெற்கு : காணித்துண்டு இல.108;
மேற்கு : காணித்துண்டு இல.108.

சிந்தன உதார நாணயக்கார,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
இரத்தினபுரி,
2025.09.22.

01-252

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/76055
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NP/28/04/44/ OD/3067.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின் திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவின் வசந்தநகர் கிராமத்தில் குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட தோராயமான சுவட்டு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சுமார் 1 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை சமய நடவடிக்கைகளுக்காக இலங்கை பென்தகொஸ்த சபையின் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு: பாதை;
கிழக்கு: அரசாங்கக் காணி;
தெற்கு: அரசாங்கக் காணி;
மேற்கு: பாதை.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** : முப்பது (30) வருடங்கள் (2025.12.05ஆந் திகதி முதல் 2055.12.04 ஆந் திகதி வரை);

**வருடாந்தக் குத்தகைத் தொகை**:தலைமை மதிப்பீட் டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கௌரவ அமைச்சர் அங்கீகரிக்கும் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2 % ஆகும்.

**தவணைத் தொகை** : அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை சமய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்

பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறைவேற்றிக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்ைக மேற்கொள்ள ப்படும்;

(எ) 2025.12.05 ஆந் திகதி முதல் ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.01.06.

01- 257

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

**காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: LTL/44/1345**

21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் MU/42 கிராம அலுவலர் பிரிவில் கோம்பாவில் கிராமத்தில் குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட மற்றும் பிரதேச செயலாளரால் மேற்கையொப்பமிடப்பட்ட தோராயமான சுவட்டு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 0.2023 ஹெக்டயார் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை வர்த்தக நோக்கத்திற்காக திரு. கமலநாதன் நகுலேந்திரன் எனும் பெயரில் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது:

வடக்கு: அரசாங்கக் காணி;
கிழக்கு: அரசாங்கக் காணி;
தெற்கு: எம். பகீரதன் என்பவரின் காணி;
மேற்கு: ஒழுங்கை.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.04.10ஆந் திகதி முதல் 2055.04.09 ஆந் திகதி வரை);

வருடாந்தக் குத்தகைத் தொகை: 2025ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்கம் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்ெகாருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை: தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(இ) இந்தக் குத்தகை ஆரம்பித்து (01) வருட காலத்திற்குள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப் பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறை வேற்றிக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ப்படும்;

(எ) 2025.04.10 ஆந் திகதி முதல் ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றுக் கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
''மிஹிகத மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.01.08.

01- 254

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/68883.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NP/28/04/02/SLO/45/1696.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் KN/ 45 உமையாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் பரந்தன் கிராமத்தில் KI/ KND/ 2025/ 220 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம் A மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 12.1406 ஹெக்டயார் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை வர்த்தக நடவடிக்ைககளுக்காக பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட் எனும் பெயரில் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது:

வடக்கு: கடத்திரல் வரைபடம் 920045 வலயம் 01 பத்திரம் 01;
கிழக்கு: PPYA 1041 துண்டு இலக்கம் 13;
தெற்கு: துண்டு இலக்கம் B மற்றும் C;
மேற்கு: துண்டு இலக்கம் C.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.12.19ஆந் திகதி முதல் 2055.12.18 ஆந் திகதி வரை);

வருடாந்தக் குத்தகைத் தொகை: 2025ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை: தவணைத் தொகை அறவிடப் பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(இ) இந்தக் குத்தகை ஆரம்பித்து (01) வருட காலத்திற்குள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப் பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறை வேற்றிக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படும்;

(எ) 2025.12.19 ஆந் திகதிமுதல் ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றுக் கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
''மிஹிகத மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.01.08.

01- 253

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/63241.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NCP/PLC/ L5/ MT/ 04/2020.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 580, வெல்லாரகம கிராம அலுவலர் பிரிவில் வெல்லாரகம கிராமத்தில் அதிகாரம் பெற்ற நில அளவையாளாரால் தயாரிக்கப்பட்ட சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம் 01 ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள 5.2960 ஹெக்டயார் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை விவசாய நடவடிக்கைகளுக்காக திரு. அழுத்கெதர விக்டர் ரணசிங்க என்பவரால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது:

வடக்கு: ஆர்.கே. விவசாயப் பண்ணை;
கிழக்கு: கிளைப்பாதைக்கான ஒதுக்கு;
தெற்கு: வன ஒதுக்கு மற்றும் சுரங்க மற்றும் ஏனையோரின் சேனை;
மேற்கு: செனவிரத்னவின் சேனை மற்றும் பாதை.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2020.07.15ஆந் திகதி முதல் 2050.07.14 ஆந் திகதி வரை);

(ஆ) வருடாந்தக் குத்தகைத் தொகை: 2020ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி யானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2020 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5.000,000.00) அதிகமாக இருக்கம் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டின் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை ஒவ்வொரு 05 வருடங்களுக்ொ்காருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை:** தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து (01) வருட காலத்திற்குள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்

பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறை வேற்றிக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படும்;

(ஏ) 2020.07.15 ஆந் திகதிமுதல் ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்து வதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ்.வீ. ஏ.டீ.இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
''மிஹிகத மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.01.14.

01- 308

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/63242.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NCP/PLC/ L5/ MT/ 04/2020.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

அநுராதபுரம் மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 580, வெல்லாரகம கிராம அலுவலர் பிரிவில் வெல்லாரகம கிராமத்தில் அதிகாரம் பெற்ற நில அளவையாளாரால் தயாரிக்கப்பட்ட சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம் 01 மற்றும் துண்டு இலக்கம் 02 ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள 10 ஏக்கர் 02 றூட் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை விவசாய நடவடிக்கைகளுக்காக திரு. ரணசிங்ககே கருணாரத்ன என்பவரால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது:

துண்டு இலக்கம் 01
வடக்கு: பிரதேச சபை பாதைக்கான ஒதுக்கு;
கிழக்கு: கிளைப் பாதைக்கான ஒதுக்கு;
தெற்கு: ஆசிரி விவசாயப் பண்ணை;
மேற்கு: பிரதேச சபை பாதைக்கான ஒதுக்கு.

துண்டு இலக்கம் 02
வடக்கு: ரீ.எம்.ஜயரத்னவின் சேனை;
கிழக்கு: வன ஒதுக்கு;
தெற்கு: டீ.எம்.செனவிரத்னவின் சேனை;
மேற்கு: கிளைப் பாதைக்கான ஒதுக்கு.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்:** முப்பது (30) வருடங்கள் (2020.09.29ஆந் திகதி முதல் 2050.09.28 ஆந் திகதி வரை);

(ஆ) **வருடாந்தக் குத்தகைத் தொகை:** 2020ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான மேம்படுத்தப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2020 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5.000,000.00) அதிகமாக இருக்கம் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டின் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை ஒவ்வொரு 05 வருடங்களுக்ெகாருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்இனைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை:** தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து (01) வருட காலத்திற்குள்

மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப் பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள / அமைக்கப்பட்டுள்ள கட்டி டங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமை யுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறை வேற்றிக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படும்;

(ஏ) 2020.09.29 ஆந் திகதிமுதல் ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்ற உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்து வதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ்.வீ. ஏ.டீ.இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.01.14.

01- 309

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது